**சமுர்த்தி நுண்நிதி எழுதுகருவிகள் சுழற்சி நிதியம் - 2019**

-------------------------------------------------------------------------------------------------------------

## 1.1 அபிப்பிராயம்

சமுர்த்தி நுண்நிதி எழுதுகருவிகள் சுழற்சி நிதியத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புகள், பொழிப்புடனான முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

நிதியத்தின் நிதிக்கூற்றுக்கள் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன உண்மையான மற்றும் நியாயமான விதத்தில் இலங்கைப் பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கிணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது இந்த அறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தினதும் அதனோடு தொடர்புடைய தரப்பினரதும் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும்போது, நிதியத்தின் தொடர்ந்தியங்கும் ஆற்றலைத் தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். முகாமைத்துவம் நிதியத்தைக் கணக்கொழிப்பதற்குக் கருதினால் அல்லது மாற்றீடு இல்லாவிடின் செயற்பாடுகளை இடை நிறுத்த நடவடிக்கை எடுத்தாலே தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் குறித்த விடயங்களை வெளிப்படுத்தல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயற்பாடு தொடர்பான பொறுப்பு அவ்வாளுகைக்குட்பட்ட தொடர்புடைய தரப்பினரால் மேற்கொள்ளப்படும்.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலநேரத்திலான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளை பேணுதல் அவசியமாகும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலை வழங்குதல் மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலாக இருந்தபோதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும்போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றது என்பதற்கான உறுதிப்படுத்தல் அல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் தாக்கமளிப்பதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதாரத் தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக ஏற்படக்கூடிய தாக்கங்களைக் கருத்திற் கொள்ள வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடி ஏற்படுவதற்கு காரணமாகின்றது.
- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடு சம்பந்தமாக புரிந்து கொண்ட போதும், உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வத் தன்மை தொடர்பாக அபிப்பிராயத்தை வெளியிடக் கருதவில்லை.
- முகாமைத்துவம் பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் சரியான தன்மையினையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகளினதும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினதும் நியாயபூர்வத் தன்மையை மதிப்பாய்வு செய்தல்.
- சம்பவங்கள் அல்லது நிலைமை காரணமாக நிறுவனம் தொடர்ந்தியங்குவது தொடர்பாக போதியளவு நிச்சயமற்ற தன்மை உள்ளதா என்பது தொடர்பாக பெறப்பட்ட கணக்காய்வுச் சான்றினடிப்படையில் கணக்கீடு சம்பந்தமான நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் தன்மை தொடர்பான அடிப்படையைப் பயன்படுத்தலாம் எனத் தீர்மானிக்கப்பட்டது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் எண்ணுவதாயின் நிதிக்கூற்றுக்களிலுள்ள அத்தகைய வெளிப்படுத்தல்களுடன் எனது கணக்காய்வு அறிக்கையில் கவனம் செலுத்த வேண்டும். அந்த வெளிப்படுத்தல் போதுமானதாக இல்லாதிருப்பின் எனது அபிப்பிராயம் மாற்றத்திற்குள்ளாக வேண்டும். எனது முடிவானது கணக்காய்வு அறிக்கைத் தினம் வரையான கணக்காய்வுச் சான்றுகளின் அடிப்படையிலானவை. எவ்வாறாயினும், எதிர்கால சம்பவங்கள், அல்லது நிலைமை காரணமாக தொடர்ந்தியங்கும் தன்மை முடிவுக்கு வரலாம்.
- வெளிப்படுத்தல்களை உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் உசிதமானவாறும் நியாயமானவாறும் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமை, நடைமுறைகள், ஏடுகள், அறிக்கைகள், மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிமைக்கப்பட்டுள்ளனவா என்பதும் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணப்படுகின்றதா என்பதும்,
- நிதியத்தின் ஆளுநர் சபையால் வழங்கப்பட்ட ஏதாவதொரு எழுத்துமூலச் சட்டம் அல்லது ஏனைய பொது அல்லது விசேட பணிப்புரைகளுடன் நிதியம் இணங்கியிருந்ததா என்பதும்,
- அதன் அதிகாரங்கள், பணிகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்
- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனுடனும் ஆக்க பூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

கொடுக்கல் வாங்கல்களை முகாமைத்துவத்தின் பொது மற்றும் நிர்ணயிக்கப்பட்ட அதிகாரத்துடன் அமுல்படுத்துதல் தொடர்புபட்ட அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்குத் தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களைப் பதிவு செய்தல், மற்றும் சொத்துக்களுக்கான கணக்களிப் பொறுப்பினைப் பேணுதல் முகாமைத்துவத்தின் பொது மற்றும் நிர்ணயிக்கப்பட்ட அதிகாரத்துடன் மாத்திரம் சொத்துக்களை அணுகுதல், பதிவுசெய்யப்பட்ட சொத்துக்களுக்காக கணக்களிப் பொறுப்பினைப் பேணி சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியின் போது இணக்கம் செய்தல், மற்றும் வித்தியாசம் காணப்படுமாயிருந்தால் அவை சம்பந்தமாக முறையான நடவடிக்கை எடுத்தல் முதலியவற்றிற்காக நியாயமான உறுதிப்படுத்திலினைப் பெற்றுக்கொள்வதற்குப் போதியளவு ‘‘சிறப்பாகத் திட்டமிடப்பட்ட’’ உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமை நிலையத்தினால் பேணுதல் அத்தியாவசியமானதாகும்.

### 1.5.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | நிதிப்பிரமாணம் 876(3) | சட்டரீதியல்லாத நிதியமொன்றைத் தொடர்ந்தும் பேணிச் செல்வதற்கு நியாயமான காரணங்கள் இருந்தால், அத்தகைய நிதியங்கள் பாராளுமன்றச் சட்டத்தின் மூலம் சட்டப்பூர்வமாக்கப்பட வேண்டிய போதிலும், அத்தகைய நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | நிதியங்களை பாராளுமன்ற சட்டமொன்றின் ஊடாக சட்டமாக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | அரச பெறுகை வழிகாட்டிக் கோவையின் 4.2.1 ஆம் வழிகாட்டி | அவசியமான பெறுகை நடவடிக்கைகள் பிரதான பெறுகைகள் திட்டத்தில் பட்டியலிடப்பட்டு விரிவான பெறுகைகள் திட்டமொன்று | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் பெறுகைத் திட்டமொன்று தயாரிக்கப்பட |

| | | | | |
|---|---|---|---|---|
| | | தயாரிக்கப்பட்டு 6 மாதங்களுக்கு ஒது தடவை நாளதுவரையாக்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டுக்காக பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிராததுடன், ரூபா 98,160,027 ஆன எழுதுகருவிகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. | | வேண்டும். |
| (இ) | 5.4.11 ஆம் வழிகாட்டி | பெறுமதி சேர் வரியின் அடிப்படையில் வரி செலுத்த வேண்டிய தனியார் அச்சீட்டு நிறுவனமொன்றிடமிருந்து 07 சந்தர்ப்பங்களில் ரூபா 30,319,960 ஆன வங்கி எழுதுகருவி அச்சீட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், அந்த வழங்குநரிடமிருந்து வரிப் பற்றுச்சீட்டுகளை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | நிறுவனத்திற்கு பெறுமதி சேர் வரி செலுத்தப்பட்டுள்ளமையால், வரிப் பற்றுச்சீட்டுகளை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**2. நிதிசார் மீளாய்வு**

**2.1 நிதிசார் விளைவுகள்**

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 11,018,046 ஆன மிகையாக இருந்ததுடன், அதனோடு ஒத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 15,908,083 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 4,890,037 ஆன பின்னடைவொன்று அவதானிக்கப்பட்டிருந்தது. இப்பின்னடைவிற்கு எழுதுகருவி விற்பனை வருமானம் குறைவடைந்தமை பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | லங்கா சலுசல நிறுவனத்திற்கு சொந்தமான களஞ்சியத்தில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த எழுதுகருவி இருப்பு 2010 ஆம் ஆண்டின் போது அகற்றப்பட்டிருந்த போதிலும், அதற்காக | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | பெற வேண்டிய பணத்தை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செலுத்திய ரூபா 1,454,112 ஆன களஞ்சிய வாடகை வைப்பினை மீள அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான எழுதுகருவிகளை அச்சிடுவதற்கு அரச அச்சீட்டுத் திணைக்களத்திற்கு செலுத்த வேண்டிய ரூபா 21,269,895 தொகை 04 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும், தீர்ப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | மீதிகளை தீர்ப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | 2019 திசெம்பர் மாத வங்கி இணக்கக்கூற்றில் வைப்புச் செய்ய வேண்டிய போதிலும், தீர்வையாகாத ரூபா 272,713 தொகையான 11 காசோலைகள் மற்றும் காசுப் புத்தகத்தில் பதிவு செய்யப்படாத வங்கி நேரடி செலவு வைத்தல்கள் ரூபா 98,152 தொகையானது 3 முதல் 5 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்துள்ள போதிலும், இதுவரையிலும் தீர்ப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | நேரடி செலவு வைத்தல்களை இனங்கண்டு வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பு மற்றும் நல்லாளுகை

### 4.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிப்பிரமாணம் 877(2)(ஈ) பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து 02 மாதத்திற்குள் நிதிக்கூற்றுக்கள் மற்றும் வருடாந்த செயலாற்றுகை அறிக்கை என்பன கணக்காய்வாளர் தலைமை | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணம் மற்றும் சுற்றறிக்கை அறிவுறுத்தல் பிரகாரம் உரிய காலத்தில் கணக்குகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.. |

அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், 2019 ஆம் வருடத்தின் நிதிக் கூற்றுக்கள், 02 வருட கால தாமதத்தின் பின்னர் 2022 திசெம்பர் 08 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

**4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிப்பிரமாணம் 877(1) இன் பிரகாரம் மீளாய்வாண்டில் நிதியத்தின் செயற்பாடுகள் தொடர்பாக பாதீடொன்று தயாரிக்கப்படவில்லை. | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணம் மற்றும் சுற்றறிக்கை அறிவுறுத்தல் பிரகாரம் உரிய காலத்தில் பாதீடு தயாரித்து சமர்ப்பிக்கப்பட வேண்டும்.. |